# சூரிய காந்தி

SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 புதன்கிழமை 11 - 2 - 1998 இதழ் 10



வினோவின் தரம் என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள் 22 காரட் நகைகள் பெற நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

**யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை தொடர்ந்து அங்கு பல உயிராபத்து ஏற்படக்கூடியநிலை இருக்கின்றது. இதனை உடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும்.**

யாழ். போதனா வைத்தியசாலையில் மிகவும் அவசியமான மருந்துவகைகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்குருக்கின்றது. இதனால் சிகிச்சைக்காக வரும் நோயாளர் பல சிரமங்களுக்குமுகம் கொடுக்க வேண்டியிருபப தாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அனேகமாக வைத்தியசாலை நோயாளருக்கு கொடுக்கும் மருந்தைவிட இந்நோயாளர் தமது நோய்க்கு வெளியே இயங்கும் தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் மருந்து பொருட்களை

(6ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழையில் திருடர் மக்களிடம் பிடிபட்டனர்

மீளக்குடியமர அனுமதிக்காத தெல்லிபழை பிரதேச செயலரின் ஆள புலத்து குட்பட்ட பிர தேசங்களிலிருக்கும் -இரணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னும் தப்பியுள்ள வீடுகளிலிருந்து அனுமதியின்றி அகற்றப்பட்ட கதவுகள் நிலைகள் யன்னல்கள முதலான மரத்தளபாடங்கனைக் களவெடுத்துச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சு. க. யாழ்கிளை பொருளாளரை ராஜினாமா செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் கிளையின் தனாதிகாரியான மங்கள நேசன் அவர்களை உடனடியாக தம் பதவியிலிருந்து இராஜினாமாச்செய்யுமாறு கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா கோரியுள்ளார்.

இதனிடையே மங்களநேசன் அவர்கள் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி( ஈ. பி. ஆர். எல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட வைத்தியசாலைகளிற்கு சுகாதார அமைச்சு அதிகாரி விஜயம்

சுகாதார அமைச்சின் மேல்திக செயலாளர் திருமதி கி பெர்னாண்டோ யாழ்மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு விஜயம் செய்து அவற்றன் குறைபாடுகளை கேட்டு அறிந்தார்

யாழ் போதனா வைத்தியசாலையில் உயர் அதிகாரிகளுடன் மாநாடு ஒன்றை நேற்று முன் தினம் இவர் நடாத்தினார்.

மந்திகை வைத்திய சாலைக்குரிய பாக்ஸ் மற்றும் சில முக்கிய பொருட்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை யாழ் மாவட்டத்தில் உள்ள மாவட்ட வைத்திய சாலைகளில் சிறந்ததை தெரிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

## நகரில் அதிகரித்த மருந்து விலை

போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள திடீர் மருந்து விற்பனையகங்களில் இம்மருந்துத் தட்டுப்பாட்டினையடுத்துவெளியில்தனியார் மருந்து விற்பனையகங்களில் இம்மருந்துகளின் விலைகள் திடீர்ரென அதிகரித்துள்ளதாகவும், சில மருந்துகளை அதிகரித்தவிலையிலும் கறுப்புச் சந்தையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பாதாகவும் பொதுமக்கள் புகாரிட்டுள்ளனர்

இது குறித்து செயலக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளோ. திடீர் பாய்ச்சல் சுகாதாரத்திணைக்கள பரிசோதகர்களோ ஏன் எந்தவித நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லையெனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்?

## சுண்டிக்குளம் ஊடாக படை நகர்வு தடுத்து நிறுத்தியதாகபுலிகள்தெரிவிப்பு

(கொழும்பு)

ஆனையிறவு படைத்தளத்தில் இருந்து இராணுவத்தினர் சுண்டிக்குளம் பகுதி ஊடாக முன்னேற முயற்ச்சி செய்துள்ளனர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கோடு படையினர் இப்படை நகர்வினை மோற்கொண்டதாக நம்பப்படுகின்றது இப்படைநகர்வின் இடையே புலிகளுக்கும் படையினரும் இடையில் கடும் மோதல்கள் ஏற்பட்டன.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவற்தகாக படையினர் பலமுறை ஆனையிறவு பரந்தன் பாதை ஊடாகமுயற்சி செய்தபோதிலும் அந்நடவடிக்கைகள வெற்றி அளிக்கவில்லை இதனாலேயே படையினர் தம் முன்னேற்றப்பாதையினை மாற்றி சுண்டிகுளம் பகுதி ஊடாக முன்னேற முயன்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொன் விழாவுக்கு முன் பாதையா?

## கைப்பற்றியது பறிபோனது ஆய்வாளர்கள் தெரிவிப்பு

வடக்கில் புலிகளிற்கு எதிரான போரில் 96 வீதம் பிரதேசங்களை பாதுகாப்பு படையினர் விடுவித்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்த போதிலும் 90 மைல் நீளமான வவுனியா யாழ் வீதியின் ஒரு பகுதியை கைப்பற்ற இருநூற்றிஐம்பது நாட்களாக யுத்தம் நடாத்தி வரும் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களிலும் சில பகுதிகளை தற்போது இழந்த நிலையிலுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதென இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

இப்பாதையினை சுதந்திரதின பொன்விழாவிற்கு முன்னர் திறந்து வைத்து யாழ். பயணிகளை கண்டியில் வரவேற்க அரசு திட்டமிட்டும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## சென்ற ஆட்சியில் வெள்ளை வான் இந்த ஆட்சியில் நீல வானா?

**ஜோசப் பரராஜ சிங்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இலக்கத்தகடற்ற நீல நிறவானில் வந்தவர்களால் மூன்று இளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து இது வரை உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இவர்கள் தற்போது இராணுவ குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்காகவே தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள என்ற தகவல் கிடைத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

ஐ.தே .க ஆட்சியில் ''வெள்ளை வான்'' போன்று இப்பொழுது ''நீல வான்''கள என வாகன ஆட்கடத்தல் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பீதி ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இந்தியதேர்தலில்இம்முறை வேட்பாளர்கள் குறைவு

இந்தியப் பொதுத் தேர்தலில் வழமையை விட இம்முறை குறைவான வேட்பாளர்களே போட்டியிட இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 1996 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 13,952 பேர் போட்டியிட்ட போதிலும் இம்முறை 4,700 வேட்பாளர்களே போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு கட்டுப்பணம் பல மடங்காக அதிகரித்தமையே காரணம் எனவும் தேர்தல் ஆணைக் குழு தெரிவித்தது.

## மிதிவெடியில் காயம்

சுன்னாகம் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதால் இளைஞர் ஒருவர் வலது காலை இழந்துள்ளார் ஆலடி உடுவிலைச் சேர்ந்த ராசன் சுமன் என்ற 15 வயது இளைஞர் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம் பரிபாலன சபையினரால் நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டி 14.2.98 சனிக்கிழமை மு'ப 9.00 மணிக்கு யா/வண்நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் விண்ணப்பம் அனுப்பிய பாடசாலைகளைச் சமூகம்தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## மீண்டும் இயங்குகிறது

புத்தூர் கிராமசபை அலுவலகம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது ரிவிரச இராணுவ நடவடிக்கையின் பின்னர் இங்கு படையினர் தங்கியிருந்து வீதியால் செல்லும் வாகனங்கள், பொதுமக்கள் மீதான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தற்போது இவ்வலுவலகத்துக்கு முன்பாக இருந்து சோதனைளை படையினர் மேற்கொள்கின்றனர் இவ்வலுவலகத்துக்கு முன்பாக உள்ள புத்தூர் மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தொடர்ந்தும் படையினர் தங்கியுள்ளனர்.

## கொடியேற்றம்

திருநெல்வேலி பழவகிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்கொடியேற்றத்திருவிழா இன்று நடைபெறுகிறது. தொடர்ந்து 16 நாட்கள் திருவியழாக்கள நடைபெற உள்ளன.

## வரப்பிரகாஷ் வழக்கு இன்று விசாரணை

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீடமாணவன் வரப்பிரகாஷ் கொலை வழக்கு விசாரணை இன்று நடைபெறவுள்ளது கண்டி மஜிஸ்திரேட் மிகிந்கியாராச்சி வழக்கை விசாரணை செய்வார்.

## சோதிட வகுப்பு

சோதிட ஆய்வு மன்றம் யாழ் நாவலர் மகா வித்தியாலயத்தில் சோதிட வகுப்புக்களை நடத்தி வருகின்றது வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இவ் வகுப்பில் சோதிட ஆர்வலர்கள் பங்குபற்றி பயனடையலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது

## வைத்திய அதிகாரி நியமனம்

வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரியாக திரு. சொ. பரராஜசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். வேலணையில கடமையாற்றிய வைத்திய அதிகாரி திரு. ஆ. திருநாவுக்கரசு அவர்கள யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். (சி-1)

## உணவில் நஞ்சு இளம்பெண் மரணம்

குருநகரைச் சோந்த இளம் குடுப்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் உணவு உண்டபின் மரணமானார்.

இவர் அருந்திய 'திருக்கை' வகை மீன் உணவு பழுதுபட்டு நஞ்சாகியதால் இம்மரணம் நிகழ்ந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

# கோபாலசாமி பற்றி அவரது முன்னாள் தோழர் முத்துராமலிங்கம்

வை. கோபாலசாமியின் மறுமலர்ச்சி தி.மு.க விலிருந்து விலகி கருணாநிதியுடன் சேர்ந்துள்ள முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் தான் விலகியதற்கான காரணத்தையும் கோபாலசாமியின் நடத்தையையும் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

அரசியலுக்கு நான்புதியவன் அல்ல. ஏறத்தாழ 35 வருடங்களாக அரசியலில் இருக்கிறேன், அண்ணா காலத்தில் இருந்து பல தலைவர்களுக்கு அறிமுகமாகி - எதிர்க் கட்சியாகத் தீவிரமாக இயங்கி இருக்கிறேன் எம், ஜி, ஆரை எதிர்த்து தேர்தலில் நின்றிருக்கின்றேன் சென்ற தி,மு,க ஆட்சியில் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறேன். இப்படிப்பட்ட அனுபவப் பின்னணிகொண்ட எனக்கு ''ஸீட்'' தரப்படாதது ஒரு சந்தர்ப்பக் குறைவு தானே ஒழிய, அந்தஸீட்டிற்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை இதனால் கட்சிக்குத் தான் களங்கமே தவிர எனக்கல்ல.

தேர்தல் கூட்டணி அ, தி, மு, க வுடன் என்று முடிவானதும் வை, கோ, எந்த மாதிரி நடந்து கொண்டார் என்பதைப் பார்க்க வேண்டும். தேர்தல் கூட்டணி பற்றி முடிவெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் இருந்தேன்,

நாங்கள் கேட்ட தொகுதிகள் 12, ஆனால் பெயருக்கு ஒரு குழுவை நியமித்தாரே ஒழிய ''நானே தனியாகப் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என்று அவர் தான் ஜெயலலிதாவிடம் போய்ப் பேசினார்,

ஐந்து தடவைகளுக்கு மேல் போய்ப் பேசினதின் பலன் ஸீட்டுக்களின் எண்ணிக்கை எட்டிலிருந்துகுறைந்து கொண்டே வந்து ஐந்து ஸீட்டாக நன்றது, கடைசியாக வை.கோ போய் பேசிப் பார்த்த போது கூட, கூடுதலாக ஒரு ஸீட்டைக் கூட வாங்க முடியவில்லை அவரால். எங்களையும் ஜெயலலிதாவிடம் பேச அனுமதிக்கவில்லை,

அவரிடம்பேசி வாதாடிக் கூடுதலான தொகுதியை பெறவும் வை, கோவால் முடியாத போது, வை, கோவின் நம்பகத்தன்மை மீதே எங்களுக்குச் சந்தேகம் வந்தது, கட்சியின் முக்கிய பொறுப்பில் இருந்தவர்களே அவமானப்படுத்தப் பட்டதாக உணர்ந்தோம்.

கட்சியின் கொள்கை, மரியாதை எல்லாம் போய் விட்டது, ம, தி, முகவை உருவாக்கியவர்களுள் நானும் ஒருவன் என்றமுறையில் ம. தி. மு. க, எப்படியெல்லாம்தடம் புரண்டு ஓடுகிறது, என்பதை உணர்ந்து மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தேன், கட்சியை விட்டு வெளியேற இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது வெளியேறிவிட்டேன்,

## கண்டி குண்டுவெடிப்பால் சுற்றுலாத்துறை பாதிக்கவில்லை

-- தர்மசிறி சேனநாயக்கா --

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களால் இலங்கை சுற்றுலாத்தொழில் பாதிக்கப்படவில்லை என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்:

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொன்விழாக் கண்காட்சியைக் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்த பின்னர் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார், மேலும் அவர் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் இவ்வாண்டு ஜனவரி மாதத்தை ஒப்பிடுகையில் இவ்வாண்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 17 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று அமைச்சர் கூறினார்.

## திறந்த பல்கலைக்கழகம் பற்றி ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தை நாட்டின் ஏனைய திறந்த பல்கலைக் கழகங்களைப் போல் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரி தெரிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி, மாத்தறை பகுதிகளில் மாணவர்கள் நூலகம் மற்றும் பல்வேறு வசதிகளுடன் தமது கற்கை நெறிகளை மேற்கொள்கின்றனர்.

பல்வேறு பிரச்சினைகளால் பின் தள்ளப்பட்டுள்ள யாழ்ப்பாண மாணவர்கள் இங்கு தமது கல்வியை கற்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரத்மலானையில் லயன்எயர் பயணிகள் இளைப்பாற ஒழுங்கு

இரத்மலானை விமான நிலையத்தில் பிரயாணிகள் இளைப்பாறுவதற்கென இளைப்பாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இளைப்பாறும் மண்டபம் விமானமூலம் பொதிகளை அனுப்பும் அலுவலகம். பயணச்சீட்டு இணை அலுவலகம். முன்னுரிமை பயண ஒழுங்குகள். முக்கிய பிரமுகர்கள் தங்குமிடம் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

## சண்டே லீடர் வழக்கு விசாரணை மே 25

சண்டே லீடர் பத்திரிகை மீதான அவதூறு வழக்கு விசாரணை மே 25ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் வசந்த விக்கிரமதுங்க, வெளியீட்டாளர் லால்ராஜ் விக்கிரமதுங்க ஆகியோர் மீது கிரிமினல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு வாக்குறுதி வழங்கும் அரசாங்கம் என்ற தலைப்பில் 1993ம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் திகதி ஜனாதிபதியை அவதூறு செய்யும் விதத்தில் செய்தியைப் பிரசுரித்ததாகவே இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## "ரிவி" பிரச்சாரம்

தமிழகத்தில் நடைபெற்று வரும் தேர்தல் பிரச்சாரங்களில் ''ரிவி'' பிரச்சாரம்தான் முக்கியமாக இருக்கிறது.

இந்த 'ரிவி' வசதி திமுக வுக்கும் அதிமுகவுக்கும் உண்டு.

திமுக வுக்காக ''சன் ரிவி'' அமோக பிரச்சாரம் செய்கிறது. அதிமுக வுக்காக ''விஜய் ரிவி'' கடுமையாக உழைக்கிறது.

''சன் ரிவி'' திமுக பிரமுகர் முரசொலி மாறனுக்கு சொந்தமானது.

## பாத்திரங்கள் அன்பளிப்பு

வளலாய்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு இலவசமாக சமையல்பாத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இப்பாத்திரங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்படி மக்களுக்கு நாளை அன்பளிப்பு செய்யப்பட உள்ளன என்று அப்பகுதி கிராம சேவையாளரின் செய்திக் குறிப்பில் இருந்து தெரிய வருகிறது.

### லொறி விபத்தில் காயமடைந்த

# கணவனின் நிலைமை குறித்து ஈ.பி.டி.பி.யிடம் மனைவி புகார்

கடந்த மாதம் 17 ஆம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்துக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரச் சென்றபோது ஏற்பட்ட லொறி விபத்தில் படுகாயமடைந்த அப்புகாமி ஜெயசேன என்பவரின் இரு கால்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்ல வேண்டியுள்ளது எனவும் அதற்கான உதவிகளைச் செய்து தருமாறு அவரின் மனைவி யாழ். மாவட் ஈ.பி.டி. பி. அமைப்பாளர் வீ.கே. ஜெகனிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது கணவன் ஓட்டிச் சென்ற லொறியை இராணுவ சிப்பாய் ஒருவர் இடைவழியில் இருந்து ஓட்டிச் சென்றதால் இவ்விபத்து ஏற்பட்டது.

ஆனால் தனது கணவனைப் பற்றி எவருமே அக்கறையாக இல்லை எனவும், அவர் இன்றி தமது குடும்ப நிலைமையும் மோசமாகியுள்ளது எனவும் திருமதி ஜெயசேன தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி டக்ளஸ் சந்திப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெட்டுப் புள்ளி பிரச்சினை, சிறைச்சாலைகளில் பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிடுவதில் விதிக்கப்பட்டுள்ள புதிய விதிகள் ஆகியன நீக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இவ்வார இறுதியில் ஜனாதிபதியை சந்தித்து விரிவாக எடுத்துக் கூறவுள்ளதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## மயிரிழையில் தப்பினார்

ஜோர்ஜிய ஜனாதிபதி எட்வர்ட் செமினார்ட்டி நேற்று இடம் பெற்ற படுகொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார் தலைநகர் சிபிலிசியில் தமது வாகனத்தில் சென்ற சமயமே இவர் மீது குண்டுத் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டது கொலை முயற்சியில் ஈடுபட்டவரும்' ஜனாதிபதியின் மெய்காப்பாளர் உட்பட மேற்படி தாக்குதலில் பலியாகினர் 70 வயதான செமினார்ட்டி மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது கொலை முயற்சி இதுவாகும்

## அச்சுவேலியில் விவசாயிகள் கவலை

அச்சு வேலியில் மேற்கொள்ளப்படும் வெங்காயப் பயிர்ச் செய்கைகள் ஒரு புதுவித நோய் காரணமாக மிகவும் பாதிப்படைந்துள்ளன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர் கடந்த பல வருட காலங்களில் இப்பகுதியில் பெருமளவில் வெங்காயப் பயிர்ச் செய்கை மேற் கொள்ளப் படுவது. குறிப்பிடத் தக்கது.

## சிவசிதம்பரம் பங்கு பற்றவில்லை

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸுக்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்த விருந்துபசாரத்தில் த. வி. கூ தலைவர் சிவசிதம்பரம் கலந்து கொள்ளவில்லை,

புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஈ. பி டி பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரே கலந்து கொண்டனர்.

## வளலாய் சந்தை

வளலாய் பொதுச் சந்தை புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகி விட்டன.

கடந்த பல வருடங்களாக ராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த இச்சந்தை இப்பகுதி மக்கள் மீளக் குடியேறியதும் ''யூ.என்.எச்.சி ஆர்' உதவியுடன் புனரமைக்கப்பட்டு உள்ளது.

## அழகியற் கல்விக்கான செயலமர்வு

வட கிழக்கு மாகாணகல்விச் செயலரின் சுற்று நிருபத்திற்கமைய அழகியற் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களது வாண்மையை அபிவிருத்தி செய்யும் செயலமர்வுகள்வெகு விரைவில் தொடங்கப்படவுள்ளதால் அழகியற் கல்வியை கற்பிக்கும் செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களின் விபரங்களைக் கல்விக் கோட்டங்கள் கோரியுள்ளன' (சி - 1)

# திருஞானசம்பந்தர்

டாக்டர் மு. வர்தராசனார்

திருஞாசம்பந்தர் பிள்ளைப் பருவத்திலேயே இறைவனைப் பாடியவர்.

ஆடல் பாடல் ஆகிய கலைகளைவழிபாட்டுக்கு உரியவை ஆக்கியவர் அவர்.

பல பாடல்களில் அந்தந்த ஊர்க்கோயில்களைப் பாடும் இடத்தில், கோயில்களைச் சூழ்ந்த இயற்கை அழகுகளை எடுத்துரைத்துள்ளார்.

சங்க இலக்கியத்துக்கு அடுத்தபடி, இயற்கையின் அழகைப் பலவாறு பாடிய சொல்லோவியங்களை அவருடைய தேவாரத்திலே காணலாம்.

திருவையாறு என்னும் தலத்தைப் பாடும் இடம் இது:

''கோயிலை வலம் வரும் மகளிர் நடனம் ஆடும் ஓசையும் அவர்களின் நாட்டியத்திற்கு ஏற்றவாறு முழவு ஒலிக்கும் ஓசையும் கேட்டு அவற்றை மழை பெய்யும் மேகத்தின் முழக்கம் என்று எண்ணி அஞ்சிய பெண் குரங்குகள் கலங்கி மரங்களின் மேல் ஏறி வானத்தை நோக்கி மழைதானா என்று பார்க்கும் திருவையாறு. குன்றுகளில் எல்லாம் குயில் கூவ, தேன் நிரம்பிய மலர்களில் பாய்ந்து வாசனை நிறைந்து வரும் தென்றல் காற்று அடியை வருட (பாதங்களை மெல்ல தடவ) வயல்களில் உள்ள செளுமையான கரும்புகள் உறங்கும் திருவையாறு, தென்னைமரத்திலிருந்து முற்றிய காய் கீழே விழ, இளமையான எருமை பயந்து நீங்கி ஓடி வயல்களில் நெற்கதிர்களைக் கலக்கிவிட்டுத் தாமரை பூத்த வயலில் படியும் திருவையாறு.''

இவ்வாறு ஒவ்வொரு தலத்தின் இயற்கையழகையும் கற்பனைச் சுவையோடு அமைத்துப் பாடியுள்ளார்.

ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாடலில் இராவணன் கைலை மலையைத் தூக்கி எடுக்க முயன்று துன்பப்பட்டதைப் பற்றியும் சிவ பக்தன் ஆனதைப் பற்றியும் பாடுவார்.

ஒன்பதாம் பாடலில் பிரமனும் திருமாலும்தேடிக்காண முடியாத பெருமை உடையவர் சிவபெருமான் என்பார்.

பத்தாம் பாடலில் சைன பௌத்த துறவிகளின் போலி வாழ்க்கையை எள்ளியும் கடிந்தும் கூறுவார்.

பதினொன்றாம் பாடலில் பாடிய தம் பெயரைப் பெருமிதத்துடன் குறிப்பிடுவார்.

சைனரும் பௌத்தரும் துறவறத்தையே பெருமையாகப் பேசி இல்லறத்தைப் பழித்து வந்த காலத்தில், திருஞான சம்பந்தர் பெண்களுக்கு நேர்ந்த தாழ்வைப் போக்குவதிலும் போலித் துறவை வெறுத்துப் பழிப்பதிலும் ஆர்வம் காட்டினார்.

மண்ணில் நல்லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு
யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே

என்ற பாடல், சைவர்களின் திருமணங்களின்போது மகிழ்ச்சியுடன் ஓதப்படுவதாகும்

இறைவன் பெண் ஒரு பாகமாய் (அர்த்தநாரி ஈசுவரனாய்) இருக்கும். கோலத்தைச் சுட்டிக்காட்டி, இந்த உலகத்தில் நல்லபடி வாழ முடியும் என்ற ஆர்வத்தை ஊட்டி, பிறகு நல்ல கதி அடைவதற்கு எவ்வகையான குறையும் இல்லை என்ற நம்பிக்கையை அளிக்கும் பாடல் இது.

அவருடைய பாடல்கள் பெரும்பாலானவை இவ்வாறே ஊக்கமும் நம்பிக்கையும் ஊட்டிப் பாடும் ஆர்வம் நிறைந்தவை.

சோர்வையோ, கலக்கத்தையோ அவருடைய பாடல்களில் காண்பது அரிது.

மதுரையில் சைனர்களோடு வாதிடுவதற்காகத் திருஞான சம்பந்தர் புறப்பட நேர்ந்தது.

அந்த நாள் சோதிடப்படி நல்ல நாளாக இல்லை.

உடன் இருந்தவர் அதைக் குறிப்பிட்டுத் தடை எழுப்பினார்.

அப்போது திருஞான சம்பந்தர், ''எங்கள் தலைவன் சிவபெருமான் பெண் ஒரு பாகமாகக் கொண்டவன். விஷத்தையே உண்டு கண்டம் கறுத்தவன். கங்கையையும் பிறைச் சந்திரனையும் முடியில் அணிந்து, என் உள்ளத்தில் குடிபுகுந்தவன். அவ்வாறு அவன் என் உள்ளத்தில் இருப்பதால், சூரியன் சந்திரன் செவ்வாய்' புதன்' வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாள்களும் ராகு கேது என்பவையும் ஒரு தீமையும் செய்யமாட்டா! அவை எல்லாம் நல்லவைகளே, அடியார்களுக்கு மிக நல்லவை!'' என்று அஞ்சாமையும் ஊக்கமும் பிறக்குமாறு ஒரு பதிகம் பாடினார்.

வேயுறு தோளிபங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல, நல்ல அவை
நல்ல, நல்ல அடியார்
அவர்க்கு மிகவே.

சாதிவேறுபாடு, தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளுக்கு அவர் வாழ்விலும் இடம் இல்லை.

அவர் பிராமண குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தும், தம் பாடல்களுக்கு யாழ் இசைப்பதற்காகத் தீண்டாக் குடும்பத்ந்தச் சார்ந்த திருநீலகண்டா என்பவரைத் தம்முடன் தலங்களுக்கு அழைத்துச் சென்றார்.

பிராமணர்களின் தெருக்களுக்கும் வீடுகளுக்கும் அழைத்துச் சென்றார்.

அந்தத் தீண்டாதவர் உள்ளே வருவதன்றால், பிராமணர் வளர்க்கும் வேள்வித் தீ அவிந்து குற்றம் ஏற்படுமோ என்று பலர் அஞ்சியபோது அஞ்சாமல் அந்த வேள்வித் தீயின் அருகே அவரை அழைத்துச் சென்று, தீ முன்னிலும் நன்றாகச் சுடர்விட்டு ஒளிர்வதை மற்றவர்கள் காணச் செய்தாராம்.

யான் உரைப்பான சிவன் உரையே என்பார்.

ஆணை நமதே என்று உறுதி ஊட்டுவார்.

இவ்வாறே அவருடைய வாழ்விலும் பாடல்களிலும் அஞ்சாமையும் தெளிவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

''குமுதம் தலையங்கம்

பிப். 5

# பிரச்சினை தனிமனிதர்களல்ல!

ஜுரம் ஏறும் போது நாக்கில் சசப்பு அதிகரிக்கும் என்பது உடம்பிற்கு பட்டுமல்ல, தேர்தலுக்கும் பொருந்தும். அண்மைக் காலமாகத் தேர்தல் அரங்கில் பேசப்படும் பேச்சுக்களைக் கேட்கும் போது அப்படித்தான் தோன்றுகிறது.

இது வரை எமது நாட்டில் பெரும்பாலும் நாடாளுமன்றத் தேர்தல்கள் என்பவை எம்பிக்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களாக மட்டுமல்ல. அரசியல் பிரச்சினைகள் மீதான ஒருவிதக் கருத்துக் கணிப்புக்களாகவும் அமைந்திருக்கின்றன.

1971ம் ஆண்டுத் தேர்தல் வங்கிகள், நாட்டுடமை, ராஜமான்ய ஒழிப்புப் போன்ற இந்திராகாந்தியின் முற்போக்குத் திட்டங்களை மக்கள் ஆதரிக்கிறார்களா என்பது குறித்த கருத்துக் கணிப்பாக அமைந்தது.

77 தேர்தல் எமெர்ஜென்சி பற்றிய தீர்ப்பு 80 தேர்தலில் கூட்டுத் தலைமையா? நிலையான ஆட்சியா என்பதற்கு விடை. 84 தேர்தல் நேரு குடும்பத்து ஆட்சி தொடர வேண்டுமா என்பது பற்றிய கருத்துக் கணிப்பு 89 தேர்தலும் 96ம் ஆண்டுத் தேர்தலும் மேலிடத்து ஊழல் பற்றிய மக்கள் எண்ணத்தை பிரதிபலித்தன!

நாட்டின் திருப்பு முனையாக அமைந்த பிரச்சினைகள் மீது தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காக மக்கள் தேர்தல்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்த தேர்தலிலும் கூட்டாட்சித் தத்துவம், மதச்சார்பின்மை போன்ற பிரச்சினைகள் முன்நிற்கின்றன. ஆனால் இவற்றை முன்னிலைப்படுத்தி தங்கள் கருத்துக்களை பூசி மெழுகாமல் சொல்ல அரசியல் கட்சிகள் தயங்குகின்றன. ஹிந்துத்வா என்றால் என்ன அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எப்படி உதவும் என்று எடுத்துச் செல்ல .......பா.ஜ.க தயாராக இல்லை தனது 18 மாத ஆட்சியின் பலன்களைப் பட்டியலிட ஐ. மு. முன் வரவில்லை. காங்கிரசோ தன் கொள்கைகளை விட சோனியாவை அதிகம் நம்புகிறது.

அது மட்டு மல்ல. எந்த தேர்தலிலும் இல்லாத அளவிற்கு தனி மனிதத் தாக்குதலில் அரசியல் கட்சிகள் இறங்கியிருக்கின்றன. 55 வருடங்களுக்கு முன்பு வாஜ்பாய் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டார் என்று காங்கிரஸ் குற்றம் சாட்டுகின்றது.

முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு இந்தியரை விரும்பி மணந்து உணர்வு பூர்வமாகவும் சட்ட பூர்வமாகம் இந்தியர் ஆகி விட்ட சோனியாவை வெளிநாட்டுக்காரர் என்று பா.ஜ.க சாடுகிறது.

ஜெயலலிதாவின் சினிமாக் கால வாழ்க்கை பற்றி த.மா.க - தி.மு,க பேச்சாளர்கள் கிண்டலடிக்கிறார்கள் த.மா.காவின் நண்பர்களான ரஜினி. சோ பற்றி ஜெயலலிதா சாடுகிறார்.

இவையெல்லாம் படிக்க சுவாரஸ்யமாக உள்ளன. ஆனால் இவற்றால் மக்களுக்கு என்ன பயன்? விலைவாசி குறைய வேலை வாய்ப்பு அதிகரிக்க பொருளாதாரம் வளர தங்களது திட்டங்கள் என்ன? அரசியல் கட்சிகள் அதைச் சொல்லி ஓட்டுக் கேட்கட்டும். தனி மனிதத் துதி அல்லது வசை என்ற அரசியல் கலாசாரத்திற்கு இந்த தேர்தலில் முடிவு கட்டுவோம்'

இந்திய தேர்தல் கழகம்

# மாமியார் - மாதிரியே...!

டிசெம்பர் 29 . . . பகல் நேரம் டெல்லியில் ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் சீதாராம்கேசரி.

சோனியா காந்தியின் செயலர் வின்சன் ஜார்ஜிடமிருந்து காங்கிரஸ்க்கட்சி அலுவலகத்துக்கு அந்த ஃபேக்ஸ செய்தி போனது.

சோனியாஜி காங்கிரஸ் கட்சி சார்பாக தேர்தல் பிரசாரம் தொடர்பாகச் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார். கேசரிக்குத் தகவல் பறந்தது. விஷயம் தெரிந்த எல்லோரும் கைதட்ட இன்னொரு ஸ்வீட்டுக்கு ஆர்டர் கொடுத்தார் கேசரி.

அறிவிப்பு வந்ததிலிருந்து வடககிலும் தெற்கிலும் காங்கிரஸ் காரர்களுக்குத் தினம் தோறும் தீபாவளிதான்! பட்டாசு வெடித்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்படுகின்றவர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்! சோனியா படம் அச்சடிக்கப்பட்ட டிஷர்ட்டுகளை இளைஞர்கள் போட்டுக் கொளள ஆரம்பித்துவிட்டார்கள்!

'சோனியாவின் இந்த முடிவு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட மகாத்மா காந்தி முடிவு எடுத்ததற்குச் சமமானது -' என்று ஒரு போடு போட்டார் தங்கபாலு!

'அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலைபெற அன்று நாம் போராடினோம். இன்று ஓர் வெளிநாட்டுக்காரருக்கே நாட்டைத் திருப்பிக் கொடுக்க காங்கிரஸ் விரும்புகிறது . . ' என்று சந்திரபாபு நாயுடு அவருக்கு சளைக்காமல் உளறிக் கொட்டினார்!

'விண்வெளி சாதனையாளர் கல்பனா சாவ்லா ஓர் அமெரிக்கப்பிரஜை . , . இருப்பினும் 'மிகச்சிறந்த இந்தியப் பெண்மணி' என்றுதான் கல்பனாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எல்லாவகையிலும் இந்தியராகிவிட்ட சோனியாவை 'இத்தாலிக்காரர்' என்று முத்திரை குத்துவது எவ்வளவு அறிவீனம்!' என்று சோனியா ஆதரவாளர்கள் வெகுண்டனர்.

'அம்மணி . . . நீங்கள் அரசியலில் நுழைய இதுவே சரியான தருணம்' என்று சோனியாவுக்கு க்ரீன் சிக்னல் கொடுத்தவர் இமாசலப் பிரதேசத்தில் சாமுண்டாதேவி கோயிலைச்சேர்ந்த ஜோசியர் ஒருவர்!

மாமியார் இந்திராகாந்தியின் ஸ்டைலையே பின்பற்றி வருகின்றார் சோனியா. (மாமியாரைப் பின்பற்றும் ஒரே மருமகள் இவராகத்தான் இருக்கமுடியும்) சோனியா கையில் கட்டும் கறுப்பு ஸ்ட்ராப் வெள்ளை டயலுடன் கூடிய பெரிய ரிஸ்ட் வாட்ச் கூட இந்திராவின் கைக்கடிகாரத்தையே நினைவு படுத்துகிறதாம்! அதுமட்டுமல்ல, தேர்தல் களம் நோக்கிப் புறப்படுவதற்கு முன்பாகப் பலமணி நேரங்களுக்கு இந்திரா-ரஜீவ் கலந்துகொண்ட பொதுக் கூட்டங்களின் வீடியோ காஸெட்டைப் போட்டுப் பார்த்திருக்கிறார் சோனியா!

இந்திராகாந்திக்கு உரைகள எழுதிக்கொடுத்த சாரதா பிரசாததும் ராஜீவ் காந்தியின் ஆலோசகர்களில் ஒருவராக இருந்த சுமன்துபோவும் இப்போது சோனியாவிற்கு உதவி வருகிறார்கள். இவர்கள் தயாரித்துக்கொடுக்கும் உரைகளை கடைசி நிமிடம் வரையில் அடித்துத் திருத்தி பாலிஷ்செய்து பேசுகிறார் சோனியா.

இத்தாலிய பத்திரிகைகளில் இப்போது அட்டைப்பட நாயகி சோனியாதான்! 'நம் நாட்டுப் பெண்மணிக்கு இந்தியப பிரதமராகும் வாய்பபு என்றெலலாம அங்கே பெருமையுடன் தலைப்புச் செய்திகள்!

ஆனால் இந்தியாவில் நடத்தப்படும் கருததுக் கணிப்புகளில் 'தகுதியான பிரதமர் யார்?' என்ற கேள்விக்கு சோனியாவுக்கு இரண்டாவது இடம்தான் கிடைத்திருக்கிறது,' முதலிடம் பெறுபவர் வாஜ்பாய்!

ஆ. விகடன்

# கட்சிகள் பிரச்சாரத்தில் தொண்டர்களே முக்கியம்

முக்கால்வாசி இந்தியர்களுக்கு பொதுத் தேர்தல் ஊரில் நடக்கும் மிகப் பெரிய விசேஷம். திருவிழா முடிந்த பின்னும் பாட்ஜகள், கீ செயின்கள், கொடிகள், வேடிக்கை விநோதங்கள் எனறு அதன் கோலம் எஞ்சியிருக்கிறது.

ஆனால் கடைசியில் கட்சித் தொணடர்தான் முக்கியமாகிறார்.

கட்சித் தொண்டர்களை ஒருங்கிணைக்க வேண்டும். மொத்தத்தில் கட்சியின் மிக முக்கியமான தகவல் தொடர்பு சாதனமே அவர்கள்தான்.- இப்படிக்கூறுகிறார் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்சிய பிரமுகர்.

:தொண்டர்கள் இல்லாமல் தேர்தலில் ஜெயிக்க முடியாது: என்று கூறுகிறார் காங்கிரஸ் உயர்மட்ட பிரமுகர் ஒருவர்.

இமேஜ் மேம்பாடும் தகவல் தொடர்பும் தொண்டர் இல்லாமல் எடுபடாது.

# தேர்தல் பிரச்சாரத்தில் விளம்பர ஏஜென்சிகள்

இந்திய தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எல்லாமே தங்களது பிரச்சார உத்திகளை அமைக்கும் பொறுப்பை விளம்பர ஏஜென்சிகளிடம் தந்திருக்கின்றன.

கவர்ச்சிகரமான கோஷங்களை உருவாக்குவதில் இந்த விளம்பர ஏஜென்சிகள் படு உற்சாகயாக உழைத்து வருகின்றன

வழக்கமான போஸ்டர்களுடன் வீடியோ படங்கள், பாடல்கள், பனியன்கள் என்று பல பொருட்கள் இந்த ஏஜென்சிகளால் தயாரிக்கப்படுகின்றன.

காங்கிரஸ் பிரச்சாரம் சோனியா மற்றும் அவரது குடும்பத்தை முன்னிறுத்துகிறது. அந்தக் கட்சியை பொறுத்தவரை பிரச்சாரத்தின் நாயகியே அவர்தான்!

பாரதீய ஜனதாக் கட்சியின் விளம்பர உத்திகளில் முதன்மை வகிப்பது பிரதமர் பதவிக்கு ஏற்ற ஒரே தலைவராக வாஜ்பாயியை சித்தரிப்பது!

# பஸ் கட்டண உயர்வு ஏற்பட்டால் மக்கள் மேலும் பாதிக்கப்படுவர்

ஒரு மனிதனுடைய நாளாந்த நடவடிக்கையில் போக்குவரத்து ஆதி குடி காலங்களில் இருந்தே முக்கியம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் யாழ் குடா நாட்டில் இன்று போக்கு வரத்து விடயத்தில் பொதுமக்கள் வடமாகண போக்கு வரத்து சபையையே பெரிய அளவில் நம்பி இருக்கிறார்கள். யுத்த அனர்த்தத்தினால் சீரழிந்து போயுள்ள யாழ். குடா நாட்டில் இன்று பொதுமக்களின் போக்கு வரத்திற்கு வேறு ஊடகம் இல்லை சுமார் ஐந்து அரை லட்சம் மக்கள் தற்போது வதியும் யாழ் குடா நாட்டில் வட மாகாண போக்கு வரத்து சபையிடம் இருப்பது 40 பஸ் வண்டிகள்.

பொதுவாக வட மாகாண போக்கு வரத்து சபை பஸ் வண்டிகளை நம்பி தனது கடமைகளுக்கு செல்லும் அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் தமது கடமை நேரம் ஆரம்பித்து பல மணித்தியாலங்களுக்கு பின்னும், கடமை நேரம் முடிய முன்னரும் பஸ் வண்டியில் இருக்க வேண்டிய நிலையில உள்ளனர்!

குறிப்பாக தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, வட்டுக்கோட்டை, இளவாலை, மாதகல், சங்கானை, பண்டத்தரிப்பு, வடமராட்சி கிழக்கு பளை, பச்சிலைப் பள்ளி பகுதிகளுக்கு கடமைக்கு செல்லும ஊழியர்கள் போக்கு வரத்து நெருக்கடிககு உள்ளாகின்றனர்.

இதற்கு காரணம குறிப்பிட்ட பகுதிகளுக்கு செல்லும் பஸ் வண்டிகள் சனத்தொகைக்கு ஏற்ப பஸ் சேவையை நடத்த முடியாத நிலை அளவுக்கு அதிகமாக பொது மக்களை ஏற்றி செல்லும் போது அடிக்கொரு காவலரண்களின் சோதனை நடத்தும் போது ஏற்படும் தாமதம் என்பவற்றை கொள்ளலாம்.

இன்று யாழ். குடா நாட்டில் திறமான போக்குவரத்து சேவையை நடத்துவதனால் 150 பஸ் வண்டிகளாவது தேவை.

ஆனால் தற்போது கைவசம் 40 பஸ் வண்டிகள் இதனால் சீரான போக்குவரத்து ஒழுங்கை ஒழுங்கு படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதே வேளை இங்கு அனுப்பப்பட்ட பஸ்வண்டியானது சீனா தயாரிப்பிலுள்ள (கிறீயோ வோள்) என்ற ரக பஸ்வண்டி இது இங்குள்ள வீதிகளுக்கு செலுதத கூடிய சாரதிகளுக்கு அனுபவம் கிடையாது. அத்துடன் இருந்த வேலை செய்யும் ஆற்றல உள்ள பொறியியல் யாளர் இல்லை. அதே வேளை இதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் யாழ்.குடா நாட்டில் கிடையாது. எனவே பஸ் உதிரிப்பாகங்களில் திருத்த வேலை அல்லது உதிரிப்பாகங்கள மாற்ற வேண்டுமாயின் கொழும்பயே பெரும் அளவில் தங்கிநிற்க வேண்டிவரும்.

எனவே இந்தரக பஸ் வண்டி யாழ். குடா நாட்டிற்கு உதவாது என்ற அடிப்படையில் மதிய போக்கு வரத்து சபை தலைவர் ரமல் சிறிவர்த்னாவிடம் வடபகுதி போக்குவரத்து சபை பொது முகாமையாளர் செர்க்கலிங்கம் சுட்டிக்காட்டியதை தொடர்ந்து இனிமேல் இவ் ரக பஸ்வண்டி அனுப்பப்படமாட்டாது. என உறுதியளிக்கப்பட்டது.

யாழ்.குடா நாட்டில் இராணுவ நடவடிக்கையின் போது பாதிப்பு அடைந்த வடபிராந்திய போக்கு வரத்து சபை கட்டிடம் திருத்த வேலை செய்யும் நிலையம் உட்பட பல்வேறு பொறியியல் நிலையங்களை திருத்தி அமைக்க சுமார் 18.5 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இன்று வரை இவ் நிதி வடபிராந்திய போக்கு வரத்து சபையிடம் ஒழுங்கு செய்யப்படவில்லை.

தற்போது குறைந்த பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டுள்ளதால் ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு பஸ் வண்டிக்கு பதினைந்து என்ற விகிதத்தில் உள்ளது. இதனால் ஊழியர்களின் சம்பளம் வழங்ககூட முடியாத நிலையில் வருமானம் கிடைக்கப் பெறுகின்றது. தற்போது 200 ஊழியர்கள் யாழ்.குடா நாட்டில் கடமை புரிகின்றனர். ஆனால் இடம்பெயர்ந்து இன்னும் 43 ஊழியர்கள் கடமைக்கு சமூகம் தரவில்லை இவர்களுக்கு தற்போது எந்த வித கொடுப்பனவும் வழங்கப்படுவது இல்லை.

தற்போது ஊழியர்களுக்கான சம்பளம் மட்டும் 2.4 மில்லின் ரூபா தேவைப்படுகின்றது.

ஆனால் மாத வருமானம் 2 மில்லியன் மட்டும்.

இந்த நிலையில் நிர்வாகச் செலவுகள், உதிரிப்பாகக் கொள்வனவு உட்பட பல் வேறு தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வடமாகாண போக்குவரத்துச்சபை மத்திய போக்குவரததுச் சபையிடம் இருந்து மாதாந்தம் சுமார் 25 மில்லியன் ரூபாவை எதிர்பார்க்கின்றது.

இந்த நிதி மாதம் மாதம் வருவதை இங்குள்ள இராணுவ அதிகாரிகள மறைமுகமாக எதிர்ப்புக்காட்டி வருவதுடன் தற்போது அளவீடு செய்யப்படும் பஸ் கட்டணத்தை இரட்டிப்பு மடங்கு செயயுமாறு இராணுவ சிவில் இணைப்பு அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் கடமையாறறும் பிரிகேடியர் திலக ரட்ணா கேட்டுள்ளபோதும் இதனை வடபிராந்தியபோக்குவரத்துச்சபை எதிா்த்துள்ளது.

இதனையடுத்து போக்கு வரத்து அமைப்புகளின ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக இததீர்மானம்

‘நிவேதர்’

சிவில் இணைப்பு அதிகாரியினால் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடததக்கது.

பஸ் கட்டணத்தை இரட்டிப்பு செய்வதன் மூலம் நாட்டில ஏனைய பாகங்களைவிட பஸ் கட்டணம் மிகவும் உயர்ந்ததாகவே இருக்கும். யுத்தத்தினால பாதிப்படைந்து மிகுந்த கஷ்டத்தில சீவியம் நடத்தும மக்கள் மீது இது பெரிய சுமையாக இருக்கும். இவ்வாறு கட்டணத்தை இரட்டிப்பாக்கும் இராணுவ சிவில இணைப்பு அதிகாரியின் சிபார்சை அமைச்சர் ஏற்றுக்கொள்வார் ஆயின் அது மககளைப் பெரியளவில் பாதிகும்!

இந்த வேளை கப்பல் பயணிகள விமான பயணிகள போக்குவரத்திற்கு குறிப்பிடப்பட்ட பஸ வண்டிகளை ஒதுக்குவதன் மூலம் அவ் பஸ் வண்டிகளை வேறு தேவைகளுக்கு பயன்படுதத முடியாத நிலையுள்ளது. அதாவது இவ் பஸ் வண்டி காலை தொடாந்தும மாலை வரை ஒரு முறை விமான பயணசேவைககுபயன படுகின்றது. அதாவது 20கி.மீ தூரத்தை இவ வண்டி ஒரு நாளைககு போக்குவரத்து செய்கின்றது.

இராணுவம் தனது அவசர தேவைகளுக்கு பஸ் வண்டிகளை பெறுக் கொளவதால் திட்டம் இடப்பட்ட சேவைகளை மேற்கொளள முடியாத ஓர் சூழ்நிலை ஏற்படடும இவ் வேளையில் மக்கள் போக்குவரத்திற்கு நீண்ட நேரம் காத்து நிறக வேண்டியும் சில வேளை தமது பயணங்களை ஒத்தி வைக்கவேண்டிய நிலையும் கூட ஏற்படுகிறது. மக்கள் சேவைக்கு பஸ வண்டி போதாமல் இருக்கும் போது இராணுவ தேவைகளுக்கு பஸ் களை எடுப்பது பெரிய கஷ்டத்தை தருகிறது.

இராணுவத்தினரின் அனுமதியுள்ள வீதி ஊடாக பஸ் சேவை நடத்த முடியும். இராணுவ அனுமதி அற்ற எந்த ஒரு வீதியின் ஊடாக பஸ் சேவை நடத்தக் கூடாது என இராணுவம் கண்டிப்பான உத்தரவு விடுத்துள்ளது. எனவே மக்களின் போக்குவரத்து சேவை நடத்துவதை விட இராணுவ அனுமதி வழங்கப்பட்ட இடங்களுக்கான பஸ் சேவை என்பதே பொருத்தமானதாகும். இதே வேளை திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடைபெறும் போது அப்பிரதேசத்தின் ஊடாக செல்லும் பஸ் வண்டிகளுக்கு அனுமதி மறுப்பதால் சுற்றிவளைப்பும், தேடுதலும் முடிவடையும் வரை பஸ் வண்டி தரித்து நிற்க வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது.

பாதையோர காவல் அரண்களுக்கு அருகே நடைபெறும் மோதல்களை தொடர்ந்து ஆத்திரம் கொண்ட இராணுவத்தினர் பஸ் மீதும், பஸ் பயணம் செய்யும் பயணிகள் மீதும் ஏன் நடத்துனர், சாரதி மீதும் தாக்குதல் நடத்துவது சர்வ சாதாரண விடயமாக இருக்கின்றது.

குறிப்பாக கண்டி வீதி, புலோப் பளையில் நடைபெற்ற மோதல் ஒன்றை அடுத்து பஸ் வண்டி பளையில் இருந்து யாழ் நோக்கி வந்தது. பஸ் வண்டியை சூழ்ந்து கொண்ட படையினர் பயணிகள் மீது தாக்குதல் நடத்தினர், சாரதியையும் விட்டு வைக்கவில்லை. அதனையடுத்து பஸ் வண்டி மீது தாக்குதலை நடத்தியும் பஸ் வண்டியின் கண்ணாடிகள் உடைத்து சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இன்னும் இதைப் போன்ற எத்தனை இனி நடக்கப் போகின்றது என்பது போகப் போகத்தான் தெரியும்.

## முத்தையா முரளிதரன்

எனது பௌலிங் முறை சைட் ஆம் ஆக்ஷன் அதனால் கிட்டத்தட்ட (15 ஸ்ரெப்ஸ்) எடுத்துக் கொண்டுதான் வீசுகிறேன் இதன் காரனமாகவே நான் பந்தை எப்படி வீச வேண்டுமென்று நினைக்கிறேனோ அப்படியேவீசமுடிகிறது, ஆடவரும் ஆட்டக்காரர்களுக்கு ஏற்ப பந்தை உயரமாகப் போடுவது ஆஃப் ஸ்பின் செய்வது பந்தை நேரகப் போடுவது. வேகமாகப் போடுவது என்று என்னால் பலவித ஜாலங்களைச் செய்கமுடிகறது ஆட்டக்காரர்களும் எனது பந்தை எதிர்கொளளத் திணறுகிறார்கள்'

ஐந்தாறு தலை முறைகளாகவே இலங்கையிலுள்ள கண்டியில் செட்டில் ஆகிவிட்ட தமிழ்க் குடும்பம் எங்களுடை. தமிழில் எழுதப் படிக்கத் தெரியாது' என்றாலும் வீட்டில் நாங்கள் பேசிக்கொள்வதெல்லாம் தமிழில் தான்' இதெல்லாம் இலங்கை அணியில் நான் இடம் பெறுவதற்கு ஒருபோதும் தடையாகஇருந்ததில்லை காரணம் எங்கள தலைவர்திறமைக்கு மட்டுமே முதலிடம் கொடுப்டவர், அணயிலுல்ள எல்லோரும் என்னிடம வித்தியாசம் பாராட்டாமல் சகஜமாகத்தான் பழகுகிறார்கள். தவிர, தமிழ் வார்த்தைகளில் ஏதேனும் ஜெயசூரியாவுக்கு சந்தேகம் வந்துவிட்டால் என்னையொரு தமிழ்ப் பண்டிதனாகவே நினைத்து என்னிடம் தான் விளக்கம் கேட்பார் இதற்காகவே நான் தமிழில் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு நிறையத் தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்று நினைப்பேன் ஆனால் எது நேரம்?

## மாமியார் வழியில் போக விரும்பும் சோனியா காந்தி

நவீன இந்தியாவின் சிற்பி என்று புகழப்படும் ஜவஹர்லால நேருவை சோஷலிஸத்தின் மறுபெயர் என்று சொல்லலாம்.

யார் எதை' எந்த அளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை அரசாங்கமே முடிவு செய்யும் அளவுக்கு இந்த சோஷலிஸம் பொருளாதார சர்வாதிக்காரமா அவதாரம் எடுத்தது.

ரொட்டி, பால், ஏவுகணை' டாங்கி என்று சகலத்தையும் அரசேதயாரித்தது. இதனால் அரசுக்கு எழுத்தறிவு உடல்நலம் போன்ற விசயங்களில் கவனம் செலுத்த நேர மில்லாமல் போனது. அவரது மகளும் பொருளாதார சர்வாதிகாரத்தை தொடர்ந்தார். நெருக்கடி நிலவரகாலத்தில் அரசியல் சர்வாதிகாரத்தையும் அத்துடன் சேர்த்துக் கொண்டார். தில்லியில் அரசுக்குப் பதில் ஒரு தர்பாரே செயல்பட்டது. துதிப்பாடிகளுக்கும் அடிவருடிகளுக்கும் உயர்பதவி அளிக்கப்பட்டது.

தன் மாமியாரிடமிருந்தே சோனியா அரசியல் பாடம் கற்க விரும்புவதாகத் தெரிகிறது. சோனியா பிரவேசித்த இரண்டு வாரங்களுக்குள் துதி பாடலே அரசியல் சித்தாந்தம் என்ற போக்கு மீண்டும் தலையெடுத்து விட்டதைப் பார்க்கிறோம்,

## ஓரங்கட்டப்பட்ட தர்பாரின் கடைசித் தளபதி சோனியா

காவி என்பது புரட்சியின் நிறமல்ல. அனால் அதன் வெற்றி இந்தியாவின் அமைப்புக்கு புதிய வரையறையைக் கொடுக்கும்.

வாஜ்பாயி ஜெயித்துவிட்டால் அரசு விருதுகளுக்கான விருந்தாளிகள் பட்டியலில் புதிய பெயர்கள் காணப்படும். வெளிநாடுகளுக்குச் செல்லும் நல்லெண்ணத் தூது கோஷ்டிகளின் நிறம்மாறும். கலாச்சார அமைப்புக்களின் அறங்காவலர் மாற்றப்படுவார்கள். பல்வேறு நிறுவனங்களில் அரசால் நியமிக்கப்படும் இயக்குனர்கள் காங்கிரஸ் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

சுருக்கமாகச் சொல்வதானால் கடந்த 50 ஆண்டுகளாக பலரை போஷிப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் விரிவான நெட்வொர்க் சின்னாபின்னமாகிவிடும்.

அது ஒன்றும் பெரிய சாதனை அல்ல. ஆனால் இந்திய அமைப்பைப் பொறுத்தவரை அதுதான் உண்மையான,,பண்பாடுகளின் மோதல்,'?

அதனால்தான் அந்த அமைப்பு சோனியா காந்தியின் பிரவேசத்தினால் இவ்வளவு ஆசுவாசம் அடைகிறது.

சோனியாவால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்று நினைத்துவிட முடியாது

சோனியா ஓரங்கட்டப்பட்ட தர்பாரின் கடைசித்தளபதி.

அவர் தோற்றுப் போய்விட்டால் இந்திய மேட்டுக் குடித்தனத்தின் உள்ளீடற்ற தன்மை புலனாகும்.

## திருஞானசம்ப...

ஆர்வமும் நம்பிக்கையும் நிரம்பியிருந்தன.

அவற்றை உணர்ந்த பிற்காலச் சான்றோர் சிலர், அவருடைய பிறப்பு மற்றவர்களைப் போன்ற எளிய மனிதப் பிறவி அல்ல என்று வியந்து,, அவரை முருகனுடைய அவதாரம் என்று போற்றிப் பாடியுள்ளனர்.

அவர் பாடிய பாடல்கள் ஒருலட்சத்து அறுபதினாயிரம் என்று கூறப்படும். ஆனால் இப்போது கிடைக்கும் பாடல்கள் 4168 ஆகும். எல்லாம் இசையோடு பாடுதற்கு ஏற்றவாறு பண்வகுக்கப்பட்டவை, அவர் காலத்திலேயே அவராலும் அவரைச் சூழ்ந்து தலங்களுக்குச் சென்ற மற்றவர்களாலும் இசையோடு பாடப்பட்டவை. அவற்றுள் சில பாடல்கள், யமகம் மடக்கு முதலான சொல்லணி -ன் அமைந்தவை.

ஆதி சங்கரர் தென் இந்தியர் ஆகையால், திருஞான சம்பந்தரைப்பற்றி நன்கு அறிந்து அவரைப் பற்றி ஓர் இடத்தில் ''திராவிடசிசு'' என்று குறிப்பிடுவர்.

ஆகவே, திருஞான சம்பந்தர் அக் காலத்தவரால் ஒரு குழந்தை ஞானியாக உணரந்து போற்றப்பட்டார் என்பது தெரிகிறது.

வட மொழியில் பக்தி சூத்திரத்தில் ''கவுண்டின்ய'' என்ற ஒருவரே பக்தி இயக்கத்தின் மூலமாக விளங்கியவராகவும் எனக் குறிப்பிடப் படுகிறார்.

திருஞானசம்பந்தர் கவுணியர் என்று குறிக்கப்படுவதால், அவரையே அந்தப் பெருமை சாரும் என்பது அறிஞர் கருத்து.

(ஆசிரியர் எழுதிய ''தமிழ் இலக்கிய வரலாறு'' என்ற நூலில் இருந்து)

# சூரியகாந்தி

## லஞ்சம் கொடுப்பதும் தப்பு

பணம், பணம், இன்னும் பணம். என்குழந்தைக்குப் பணம், என்குடும்பத்துக்குப் பணம், என்பேரக்குழந்தைக்குப் பணம் என்ற ரீதியில் பணத்தைச் சேர்த்துக்கொண்டே போகும் குணம் தான் நமது மத்தியில் அதிகரித்துக்கொண்டே வருகின்றது,

எவ்வளவு தேடினாலும், எத்தனை சேர்த்த பின்னரும் இந்தத் தேடுதல் வேட்கை நிற்கமாட்டேன் என்கிறது.

''எதற்காக தேடுகிறோம்'' என்ற சிந்தனையே இல்லாமல் பணம் தேடுதலும் சொத்துச் சேகரித்தலும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

''பழியஞ்சித் தேட வேண்டும்' என்ற எண்ணம் யாருக்குமே இல்லை.

பரம்பரை பரம்பரையாக தேடிய சொத்துக்கள் அத்தனையையும் ஒரே நாளில் இழந்து இடம்பெயர்ந்து அல்லல்பட்டு அலைந்த பின்னரும்கூட பலருக்கும் இன்னமும் புத்தி வரவில்லை.

சொத்துச் சேர்ப்பது தப்பு அல்ல
ஆனால் தப்பான வழியில் சேர்ப்பது
ரொம்ப ரொம்ப தப்பு!

இப்போது நிறையப் பணம் வைத்திருக்கின்ற பலர் எந்த வழிமூலம் சொத்துத் தேடுகிறோம் என்பதைப்பற்றி அதிகமாகக் கவலைப் படுவதில்லை.

''லஞ்சம்'' என்ற கொடூர அரக்கன் திடுதிப்பென்று யாழ்ப்பாணம் முழுவதையுமே தனது ஆட்சியின்கீழ் கொண்டு வந்துவிட்டான்.

பணம் சேர்ப்பது ஒன்றையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர்கள் எப்படியோ பலரை விலைக்கு வாங்கி விடுகிறார்கள்.

எந்த உத்தியோகத்தர் விலைக்குப்போயிருக்கிறார், ஒரு கருமத்தைச் செய்து தருவதற்கு என்ன ''கூலி'' வாங்கியிருக்கிறார் என்ற சங்கதியெல்லாம் இப்போது அவ்வளவு ரகசியம் அல்ல!

பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடப்போவதில்லை!

''கையூட்டு'' கொடுத்தவர் யார்? தொகை எவ்வளவு? என்ன தேவையை நிறைவேற்றியதற்காகக் கொடுக்கப்பட்டது.?

இவையெல்லாம் எவ்வளவு ரகசியமாக நடைபெற்ற போதிலும் எப்படியோ வெளியே தெரிய வந்துவிடுகின்றது.

ஆனால் நமது சமூகம் சில விஷயங்களில் ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்புமாக நடந்து கொள்கிறது.

''லஞ்சம்'' பெற்றுக் கொள்வதைப் போலவே 'லஞ்சம்' கொடுப்பது என்பதும் ஒரு இழிவான தொழில்

'லஞ்சம்' வாங்கிக்கொண்டு கருமம் செய்து கொடுப்பவர்களை நாம், 'சமூகப் பிரஷ்டம்' செய்யவேண்டும். அது போலவே 'லஞ்சம்' கொடுப்பவர்களையும் நாம் 'சமூகப் பிரஷ்டம்' செய்யவேண்டும்.

ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்க நாம் விரும்பினால் லஞ்சம் வாங்குகின்றவர்களை மட்டுமல்ல. லஞ்சம் கொடுப்பவர்களையுமே நாம் சமூகப் பிரஷ்டம் செய்துதான் தீரவேண்டும்!

## பாரிய அபிவிருத்தி திட்டம் அங்கீகாரத்தை எதிர்பார்க்கிறது

**என். விநாயகலிங்கம்**

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தி திட்டமொன்றை மேற்கொள்ள இருப்பதாக வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனர் அமைச்சின் செயலாளர் என். விநாயகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வட மாகாண புனர்வாழ்வுபுனரமைப்பு அதிகார சபையின் அங்கீகாரத்துடனே இப் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் என்று சுட்டிகாட்டினார்.

இதே வேளை வட மாகாணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்திற்கு எந்த வித பாரிய அபிவிருத்திகளும் மேற்கொள்ளவிலலை என்பதும் எல்லாம் தற்காலிகம் என்ற ரீதியிலேயே அபிவிருத்திகள் நடை பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 14 சமாதான நீதிவான்கள் புதிதாக நியமனம்

யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பதின்நான்கு பேர் சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சமாதான நீதவான்களுக்கு நிலவிய பற்றாக்குறை காரணமாக பொதுமக்கள் தமது பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பல கஷ்டங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ்மாவட்ட உறுப்பினருமான திரு டக்ளஸ் தேவானந்தா பதின்நான்கு பேரின் பெயர்களைப் பரிந்துரை செய்து நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கு அனுப்பிவைத்திருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதி அமைச்சு அவர்களை சமாதான நீதவான்களாக நியமித்துள்ளது.

நீதி அமைச்சு, இவர்களின் பெயர் விபரங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் தலைமைச் செயலகத்திற்கு நேற்று அனுப்பி வைத்துள்ளது.

## யாழ் கடலுணவு பொருட்கள் கொழும்புக்கு ஏற்றுமதி

யாழ் மாவட்டத்தில் இருந்து நண்டு இறால் ஆகியன கொழும்புக்கு கொண்டு செல்லப் படுவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. தினசரி ஆயிரம் கிலோ பெரிய இறாலும் ஐநூறு கிலோ நண்டும் கொழும்புக்கு கொண்டு செல்லப் படும் என்று யாழ் மாவட்ட கடற்றொழில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சீநோர் நிறுவனமும் அண்றில் நிறுவனமும், கடலுணவு ஏற்றுமதி நிறுவனமும் யாழ் மாவட்டக் கடல்களில் பிடிக்கப் படும் நண்டு, இறால், கடல் அட்டை ஆகியவற்றை நல்ல விலை கொடுத்து வாங்கி ஏற்றுமதி செய்து வந்தது இதனால் யாழ் மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் அதிக வருமானம் பெற்று வந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## பாதிப்புற்ற சிறுவர்களுக்கு சிறுவர் அபிவிருத்தி நிதியம் உதவி

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் பாதிப்புற்ற 150 சிறுவர்களின் குடும்பங்களின் நலனை மேம்படுத்தும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த சிறுவர்க்கான அபிவிருத்தி நிலையம் முன்வந்துள்ளது.

இதற்கான தரவுகளைத் திரட்டி வழங்குவதில் அப்பகுதிக்குரிய கிராம அலுவலர்கள் பரிபூரண ஒத்துழைப்பினை வழங்கி உதவ வேண்டுமென்று அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாநகரசபை குடி நீர் விநியோகம் ஜேர்மன் நிறுவனம் அனுசரணை

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் குடிநீர் வசதிகளேது மற்றிருக்கும் கரையோரப் பகுதிகளில் குடிநீர் விநியோகத் திட்டங்களை யாழ் மாநகர சபையின் அனுசரணையுடன் செயற்படுத்தி வரும் ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனமான (ஜி, ரி, இஸட்) தனது சேவையை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக யாழ் மாநகர சபையில் இணைப்பு அலுவலகம் ஒன்றை திறந்துள்ளது.

இத்திட்ட அலுவலகத்தின் இணைப்பாளராக ஒய்வுபெற் யாழ் மாநகரசபையின் பொறியியலாளர் வே. நவரத்தினராசா நியமிக்கப்பட்டுள்ளார் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் செயலிழந்து போயிருக்கும் கோண்டாவில் -திருநெல்வேலி குழாய் மூலம் குடி நீர் விநியோகத் திட்டத்தை மீள இயக்கும் பொருட்டு அவசர கதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான இணைப்புப்பொருட்களை ஜி.ரீ. இஸட் நிறுவனம் கப்பல் மூலம் தருவித்து வழங்கியுள்ளது.

### சமாதான நீதவான்

யாழ் வணிகர் கழகச் செயலாளர் சி. நமசிவாயம் நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை சமாதான நீதவானாக யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்கிறார்.

காரைநகரைச் சேர்ந்த இவர் நீண்டகாலமாக யாழ் வணிகர் சங்கத்தில் பல்வேறு பதவி களை வகித்தவர்

### வீணாகும் குடிநீர்

யாழ்போதனா வைத்தியசாலையில் குடி நீராக வழங்கப்படும் நீர் வீண் விரயம் செய்யப் படுவதினால் குடி நீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்போதனா வைத்தியசாலையில் குடி நீர் விநியோகத்தை மேன்மைப் படுத்தும் நோக்குடன் ஜேர்மன் தொழில்நுட்ப ஆக்கமும் மாநகரசபையும் இணைந்து தண்ணீர் கொள்கல்ன்களை அமைத்துள்ளனர் இதனை பயன் படுத்தும் மக்களின் கவனயீனத்தினால் இக் குடிநீர் வீணே விரயம் செய்யப்படுகின்றது,

## பற்சிகிச்சை நிலையம் திறந்து வைப்பு

வட்டுக் கோட்டை அரசினர் வைத்திய சாலையில் மூன்றரை லட்சம் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்டபுதிய பற்சிகிச்சை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது இந் நிலையத்தை யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி கே. ரீ. சிவபாதம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்து உரையாற்றுகையில் கிராம மக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இந்நிலையம் திறக்கப்படுவது பெரும் நன்மையைத்தரவுள்ளது இம் மக்கள் அதிக சிரமத்துடன் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த கஸ்டங்கள் நீங்கியுள்ளது, என்று கூறினார்.

இந் நிகழ்விற்கு வட்டுக் கோட்டை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்'சதாசிவம் தலைமை தாங்கினார்.

## புதிய அச்சுவேலி சந்தை நீண்ட பாவனைக்கு உதவா

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட அச்சுவேலி பொதுச் சந்தை தொடர்பாக வர்த்தகரிகளிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் கட்டிட வேலைகள் சீரற்று அமைந்திருப்பதாகவும் பொறியியலாளரொருவர் ''சூரியகாந்தி'' க்கு தெரிவித்தார்.

புகார்கள் தொடர்பாக எமது செய்தியாளர்கள் சென்று நேரடியாகப்பார்வையிட்டு வர்த்தகர்களிடையே உரையாடியபோது துருப்பிடித்ததும், முன்னரே பாவிக்கப்பட்டமையுமான உருக்கு கேடர்கள் வேலைகளுக்கு பாவிக்கப்பட்டிருப்பதையும், அதை மறைக்கவர்ண தீந்தை பூசப்பட்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இக்கட்டிடம் ருபா 105 மில்லியன் மதிப்பீட்டில் சென்ற ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வெளிவாரி முடிவுகள்

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப்பிரிவினரால் சென்ற ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்ட விஞ்ஞான மாணிப் பட்டத்திற்கான இறுதிப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளதென வெளிவாரிப் பிரிவு உதவிப்பதிவாளர் அறியத் தருகின்றார்.

# அரசியல் வாதிகள் சிபார்சுடன் விடுதிகளில் தங்குவதற்கு அனுமதி

கொட்டாஞ் சேனையிலுள்ள விடுதிகளிலிருந்த தமிழ் மக்கள் தாமாகவே வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கொம்பனித் தெருவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கொட்டாஞ்சேனையிலுள்ள நான்கு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் பொலிஸாரினால் வெளியேறப்பட்டு தெருக்சுளில் அநாதரவாக விடப்பட்டதும் விடுதிகள் சீல் வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதனையடுத்து கொட்டாஞ்சேனையிலுள்ள ஏனைய விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்கள் அச்சம் காரணமாக தாமாகவே வேறிடங்களுக்கு இடம்மாறிக் கொண்டிருக்கின்றனர்.

இதே வேளை சில விடுதிகளில் அரசியல் வாதிகளின் சிபார்சுக் கடிதங்களுடன் செல்பவர்களுக்கு தங்க அனுமதி வழங்கப்படுகிறது,

## யாழ். பல்கலையில் கவிதை ஆய்வு

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையினரால் கவிதைத் திறன்காணும் ''கவிதைக் களம்'' நிகழ்வு நேற்று மாலை முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்றது, இந்நிகழ்வினை பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா, சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார், இதனைத் தொடர்ந்து கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ, சண்முகதாஸ் தலைமையில் கவிதைபற்றிய ஆய்வுகள் நடைபெற்றன,

''கவிதையும் சமூகவியலும்'' எனும் தலைப்பில் கலாநிதி என், சண்முகலிங்கனும், 'கவிதையில் அழகியல்'' எனும் தலைப்யில் சோ. பத்மநாதனும், ''கவிதையின் அனுபவ நிலை'' எனும் ததைலைப்பில் கோகிலா மகேந்திரனும் கருத்துரை வழங்கினர்,

அதனைத் தொடர்ந்து கவிஞர் இ,முருகையன் தலைமையில் ''கவிதை பற்றிய கண்ணோட்டம்'' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இடம் பெற்றது,

இந்நிழ்வு ''கவிதையை நயத்தல்'' ''கவிதை புனைதல்'' எனும் நோக்கத்துக்காகவே நடத்தப்படுவதாக பேராசிரியர் நா,சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## புலிகள்வசமுள்ள பகுதியை மீட்க படையினர் முயற்சி

கிளிநொச்சி நகரின் பல பகுதிகள் இன்று விடுதலைப் புலிகள் வசம் உள்ளது. அதனை மீண்டும் படையினர் தம் வசம் வைத்திருப்பதற்கான சண்டை அப்பகுதியில் நடைபெறுகிறது. என இராணுவ செய்தி ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்,

ஆனால் கிளிநொச்சி நகரின் முழுப் பகுதியும் விடுதலைப் புலிகள்வசம் வீழ்ந்து விடவில்லை, அதே போன்று அந்த நகரின் முழுமையான பகுதி படை வசமும்இல்லை. இருந்த போதும் இந்த நகரில் ஏனைய பகுதிகளை மீண்டும் தன்வசப் படுத்தும் நோக்குடன் யுத்தம் நடைபெறுவதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாடிப்போ அநுராதபுரத்துடன்?

வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் கீழ் இயங்கும் வவுனியா டிப்போவை அநுராதபுரம் போக்கு வரத்துச்சபை யுடன் இனைப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் மேற் கொள்ளப் பட்டுவருகிறது

வவுனியா டிப்போ முகாமையாளர் இதற்கு சம்மதிக்காதபடியால் வவுனியா டிப்போ தொடர்ந்தும் வட பிராந்திய போக்குவரத்து சபையின் கீழேயே இயங்கி வருகிறது

## புலிகளுடனான போரை இனிமேல் கடலில்தான் நடத்த வேண்டும்

### - விமானப்படை தளபதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை இனிமேல் கடலில் நடத்த வேண்டி இருப்பதாக விமானப்படை தளபதி ஏயர் மாஷல் ஒலிவர் ரனசிங்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையை சுற்றியுள்ள கடற்கரையோரப்பகுதியில் மூன்றில் இரண்டு பகுதி கடல் மீது இருபத்தினான்கு மணிநேரமும் கடும் காவல் இருக்க தேவை இருப்பதாகவும் எனவே கடற்படைக்கு நவீன விஷேட சருவிகளும். கடற்கலங்களும், கப்பல்களும் தேவைப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது போரில் இறுதி சட்டத்திற்கு வர்துள்ளதாகவும் இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்துவரும் உதவிகளை நிறுத்திவிட்டால் பயங்கரவாதத்தை விரைவில் முடிவுக்கு கொண்டுவரலாம் என் இதற்கு தற்போது எம்மிடம் இருக்கும்கடல்கலங்கள்போதுமானதாக இல்லை என்றும் அவர் மேலும் சுட்டிகாட்டியுள்ளார்.

வெளிநாட்டு கப்பல்கள், வெளிநாட்டு மீனவர்கள் எம் நாட்டு கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது. இலங்கையின் ஒருமைப்பாட்டை விரும்பும் எந்த நாட்டினரும் இதனை விரும்புவார்கள் எந்த நாட்டிளரும் இதனை விரும்வார்கள் என்றும் எனவே இது குறித்து கவனம் செலுதத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வேளை இலங்கையில் கடற்றொழிலாளர் மீன் பிடிக்கும் போது சில நடைமுறைகளை நாட்டின் நன்மை கருதி கடைப்பிடிக்க மீனவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிரிக்கட் வீரருக்கு எதிராக வழக்கு

இந்திய முன்னாள் கிரிக்கெற் வீரர் மனோஜ பிரபாகருக்கு எதிராக இந்திய கிரிக்கெற் அதிகாரிகள வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்

சிறிக்கெற் போட்டியொன்றில் வேண்டுமென்றே தோல்வியை ஏற்படுத்த சக வீரர் ஒருவர் தனக்கு சஞ்ஞம் தரமுடிற்பிட்டதாக பத்திரிகைக்கு அளித்த பேட்டியைத் தொடர்ந்ததே பிரபாகருக்கெதிராக மானநஷ்ட்ட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுளளதாக இந்தியா கிறிகெற் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது

## யாழ் மக்களின் பிரைச்சனைகள் டக்ளஸ் ஜனாதிபதி பேசுவர்

யாழ் மாவட்டத்திலுள்ள் மீன் பிடித் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முகமாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மிக விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஆழ் கடலில் மீன்பிடிக்க படையினர் விதித்துள்ளதடையினால் குருநகர்,பாஷையூர், கொழும்புத்துறை' நாவாந்துறை, சுழிபுரம், மாதகல், இளவாலைப் பகுதிகளில் வாழும் மீன் பிடித்தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும்,

இவர்களுக்கு கஷ்ட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தப் போவதாகவும் ஈழமக்கஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. வி. கே ஜெகன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது காணாமற் போனோர் விடயம், வேலை வாய்ப்பு, காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை போன்ற பலதரப்பிட்ட விடயங்களும் முன்வைக்கப்படுமெனவும் அவர் பேலும் தெரிவித்துள்ளார்.

## தோட்டதொழிலாளர் பிரச்சனை வெள்ளிக்கிழமை இறுதி முடிவு

### - ஜனாதிபதி -

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்க நேற்று தேயிலைத் தோட்ட உரிமையாளர்களையும் தொழில் அமைச்சரையும் அழைத்து பேச்சுவார்த்தைநடத்தினார்.

அலரிமாளிசையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப் படவேண்டும் என்பதைத் தாம் முழுமையாக ஏற்றுக் கொன்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி தொழிலாளர்களின் சம்பள உயர்வில்சாதகமான முடிவை எடுக்குமாறும் தோட்ட உரிமையாளர்களைக்கேட்டுக் கொண்டார்'

இது தொடர்பான இறுதி முடிவு எதிர்வரும் வெள்ளிக் கிழமை எடுக்கப்படுமென செய்திகள் தெரிவிக்கின்றன,

## சு. க. யாழ்.

. எவ்) வின் வேட்ப்பாளர் பட்டியல் மூலம் யாழ். மாநகர சபையில்வெற்றியீட்டியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## தெல்லிப்பழை

சென்ற ஒருசிலரைப் பொது மக்கள் பிடித்துப் பாதுகாப்பு படையினர்ரிடம் ஒப்படைத்தனர்

பெறுமதியான வேம்பு போன்ற மரங்கலைத் தறித்து வாகனங்களில் ஏற்றிச் சென்று விற்பனை செய்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். இந்தத் திருட்டு முயற்சிகளைத் தடுத்து நிறுத்த அப்பகுதிக்குரிய சிராம அலுவலர்களும்பொது மக்களும்.பாதுகாப்பு படையினருடன் சேர்ந்து செயற்படவேண்டும் எல்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்

## போதனா

பெற்றுகொள்வதற்கு துண்டு கையில் ஏந்தியவண்ணம்செல்வதை காணக்கூடியதாகஇருக்கின்றது. பலதுன்பங்களை கஷ்டங்களை சுமந்து வாழும் யாழ். மக்கள் தமது நோய்க்கு மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதிலும் இடர்களையே சந்திக்கின்றன்ர்

தற்போது மாசி பனி கடுமையான காலம் ஆஸ்த்மா நோயுடையவர்கள் அதிக அளவு சிகிச்சைக்கு வருவது வழக்கம் இந்த நேரத்திலும் இந்நோய்க்கானஉடனடியான நிவாரண மருந்தான ''வென்ரோலின்'' ஊசி மருந்து உட் கையிருப்பில் இல்லாதுள்ளது.

அத்துடன் இருதய நோய்க்கான உடனடி சிகிச்சை மருந்தான ''நிஃபிடிபின்'' உட கையிருப்யில் இல்லை என வைத்தியசாலை மருந்தக வட்டாரங்கள் கைவிரித்துள்ளன. இதைவிட விசர்நாய் கடிக்கு பயன்படுத்தப்படும் ஏ. ஆர். வி. ஊசி ஏற்புதடை ஊசி என்பன கூட இல்லை எனவும் வைத்தியசாலையினர் கைவிரிக்சின்றனர்

நீண்ட காலமாக மருந்து தட்டுப்பாட்டுக்கான முன்னோடி அறிகுறி தெரிந்த போது யாழ். போதனா வைத்தியசாலை துரித நடவடிக்கை மேற்கொள்ளாமையாலும் இதற்கான பயண ஒழுங்கை சம்பந்தபட்டவர் மேற்கொள்ளாதனாலும் இந்த நிலை தோன்றியுளள தாக மேலும் தெரியவருகின்றது.

அழகும் நவீனமும் நிறைந்த
தங்க வைர நகைகள்
22 கரட் தங்க நகைகள் ஒடருக்கு
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
சிங்கப்பூரில் இருந்து வெளியாகும்
புதிய டிசைன் நகைகளை
உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ள

சாரங்கா
நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
அருள்முருகன் நகை அகம்
96/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
சிவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.

'' சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பெப்ரவரி 11ம் திகதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசாமி.